**SUBORDINATE COURT, PADMANABHAPURAM**

**CASE NO.SC. 130/2019**

**Deposition of P.W. 4**

Name : செல்லப்பன்

S/o, D/o, W/o : செல்வம்

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

Dated:04.12.2024

Accused Present

<u>முதல் விசாரணை</u>–

நான் கொற்றிக்கோட்டில் வசித்து வருகிறேன். நான் ரப்பர் கடை வைத்துள்ளேன். என்னிடம் காட்டப்படும் பார்வைமகஜரில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். தேதி ஞாபகமில்லை. காலை 09.00 மணியளவில் கொற்றிக்கோடு போலீசார் எனது கடைக்கு வந்து பெருஞ்சலிம்பு சடையால் என்ற இடத்தை போலீசார் பார்வையிட்டதற்காக சாட்சியாக கையொப்பம் கேட்டார்கள். கையொப்பம் போட்டுக்கொடுத்தேன் என்னுடன் கார்த்திக் என்பவரும் கையொப்பம் போட்டுக்கொடுத்தார். அந்த பார்வை மகஜர் அ.சா.ஆ.2

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

சம்பவ இடத்திற்கும், எனது கடைக்கும் இடையே 200 அடி தூரம் இருக்கும். எனது கடையில் வைத்து தான் கையொப்பம் செய்து கொடுத்தேன். பார்வை மகஜரில் என்ன எழுதப்பட்டிருந்தது என்று

எனக்குத் தெரியாது. தெரிந்த போலீசார் என்பதால் கையொப்பம் போட்டுக்கொடுத்தேன்.

**CASE NO.SC. 130/2019**

**Deposition of P.W. 5**

Name : செல்வின்

S/o, D/o, W/o :

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

Dated:04.12.2024

Accused Present

<u>முதல் விசாரணை</u>–

நான் பண்ணிபொற்றையில் வசித்து வருகிறேன். நான் பால்வெட்டும் தொழில் செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் ஒப்புதல்வாக்குமூலம் மற்றும் அத்தாட்சியில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். 20.01.2018ம் தேதி காலை 10.30 மணிக்கு பெருஞ்சிலம்பில் வைத்து கையொப்பம் செய்தேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்

**<u>அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக அனுமதிக்க கோரி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>–**

வழக்கின் எதிரியை போலீசார் கைது செய்து விசாரிக்கும் போது எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்திலும், அத்தாட்சியிலும் கையொபப்ம் செய்துவிட்டு தற்போது பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>–**

எதிரி தரப்பில் சாட்சியிடம் குறுக்கு விசாரணை இல்லை என்று கூறப்பட்டது.